495

Regd. No. M. 1530

BALAVINODINI

OR

THE CHILDREN'S FRIEND

An Illustrated Tamil Monthly for Children

TO INSTRUCT AND CHERISH
THE YOUNG HEARTS WITH SWEET INSPIRING
AND
EDUCATIVE NOVELTIES

18 JAN 1924

Vol V] OCTOBER 1923 [No. 10

EDITED BY
VARAKAVI TIRU
A. SUBRAMANYA BHARATI

PUBLISHED BY
SRI BALASUBRAMANYAM & Co.,
Royapettah P. O., MADRAS.

Annual Subscription Inland Rs. 1—8
" " Foreign Rs. 2—0

N. B.—The Subscribers are requested to pay subscriptions to our agents only on obtaining our Bonafide receipts.

IV. Volume (1922), with beautiful half-tone illustrations

Gold Gilt Calico bind Rs. 2

All Rights reserved by the Publishers.

Vol. V. தொகுதி 5.	1923௵ அக்டோபர்௴	No. 10. பகுதி 10

CONTENTS—பொருளடக்கம்

பக்கம்.

தெய்வ வணக்கம் 289
ஹிதோபதேசம் 290
திரௌபதி பாண்டவர் ஐவருக்கும் மனைவி
யானதேன்? 291
பிரகலாத வெண்பா 294
ஸ்ரீராமாவதாரம் (204-ம் பக்கத்தொடர்ச்சி) 295
ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு (Bit) 301
மனிதன் எண்ணத்திலும் தெய்வ எண்ணமே
பெரிது 302
கெடுவான் கேடுநினைப்பான் அல்லது நினைக்குங்கேடு
தனக்கு 308
Presence of mind IV. சமயோசித
மான யுக்தி 4 317
திருக்குறள் 4-ம் அதிகாரம் அறன்
வலியுறுத்தல் மூலமும் கருத்துரையும் 319

சித்திரப் படம்.

குகன் ஓடம் விடல்

குறிப்பு.—எமது கையொப்பமிட்ட எமது கம்பெனி ரசீது பெற்றுக்கொண்டு ஏஜெண்டுகளிடம் சந்தாத் தொகையைச் செலுத்தக் கோருகிறோம், எமது ரசீது இல்லாமல் போனால் ஒப்புக்கொள்ளப் படமாட்டாது.

உ

செந்திலாண்டவன் திருவடி துணை.

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 5 | 1923௵ அக்டோபர்௴ | பகுதி 10

தெய்வ வணக்கம்.

சோதியம வேதண்ட கன்னிகையர் தந்தவபி
நயதுல்ய சோமவதன
துங்கத்ரி சூலதரி கங்காளி சிவகாம
சுந்தரி பயந்த நிரைசேர்
ஆதிநடு மூதண்டவண்ட பகிரண்டங்கள்
யாவுங் கொடுஞ்சிறகினால்
அணையுந்தனது பேடை அண்டங்களென்னவே
அணைக்குங் கலாபமயிலாம்
நீதிமறை யோதண்ட முப்பத்துமுக்கோடி
நித்தரும் பரவு கிரியாம
நீலகிரி வேலவனிராலம்ப நிர்ப்பயன்
நிர்வியாகுலன் சங்குவான்
மாதிகிரி கோதண்டதண்டந் தரித்தபுயன்
மாதவன் முராரிதிருமால்
மதுகயிடவாரி திருமருகன் முருகன் குமரன்
வாமுதவு வாகைமயிலே

அருணகிரிநாதர் அருள் வாக்கு

ஹிதோபதேசம்.

1311/1119
1.2.3.5.40

1. பெரியோர்களுடைய கோபம் கெடுதி செய்வதில் எவ்வளவு பெரியதோ அவ்வளவு அவர்களுடைய தயவு நன்மை செய்வதிலே பெரியதாம்.

2. ஸத்தியத்தைக் காப்பதனால் எவ்வளவு புண்ணிய முண்டாமோ அவ்வளவு புண்ணியம் வேறு எந்த நல்ல கர்மத்தினாலும் உண்டாகாது.

3. சுற்றத்தினரும் நண்பினரும் பிறரும் ஒருவனை விட்டொழிவர்; பிறவும் விட்டொழியும். ஆனால் ஒருவனை அவன் கற்ற கல்வி நீங்குவதில்லை. இதனாலேதான் பெரியோர் கல்விச் செல்வத்தை நன்பொருள், விழுப்பொருள், கேடில் விழுச்செல்வம் எனக் கூறியிருக்கின்றனர்.

4. பகைவன் தனக்கு அநுகூலமாயிருந்தாலும் அவனோடு சினேகிக்கலாகாது. தண்ணீர் வெந்நீரானாலும் நெருப்பை அவிக்குமன்றோ?

5. பிறர்மீது குற்றஞ் சொல்லாமல் எவன் தன் மனதையே சீர்திருத்திக் கொள்ளுகிறானோ அவன் புனிதவானாவது திண்ணம்.

ஆவணக் காப்பகம்

6. எவ்வித எண்ணங்கள் ஒருவனுக்கு உதித்து வருகின்றனவோ அவ்விதமாகவே அவனுடைய வாழ்க்கை முடிவு பெறுகின்றது.

184333

திரௌபதி பாண்டவர் ஐவருக்கும் மனைவியானதேன் ?

ஸ்ரீ

முன்னாளிலே துவட்டா என்னும் ஒரு வேதியனிருந்தான். அவன் படைப்பவனாக இருந்தான். அவனுக்கு மூன்று தலையுடைய மகனொருவன் பிறந்தான். அவன் தலைகீழாக இருந்து தவம் செய்தான். இந்திரன் 'நமது பதவியை இவன் விரும்பினான் போலிருக்கிறது. அதனாலேதான் இவ்வாறு இவன் தவஞ் செய்கிறான்' என்று சந்தேகங்கொண்டு அவனைக் கொன்றான்.

பிறகு இந்திரனைப் பிரமஹத்தி பிடித்துக்கொண்டது. அவனிடமிருந்த பிரமவொளி தருமதேவதையை அடைந்தது. ஆகவே இந்திரன் ஒளியை இழந்தவனானான்.

தன்மகனை இந்திரன் கொன்றது துவட்டாவுக்குத் தெரிந்தது. அவன் கோபங்கொண்டு தன் சடையிலொன்றைப் பறித்து எடுத்துக்கொண்டு, "என்னுடைய வல்லமையைச் சகலதேவர்களும் பார்க்கட்டும். இந்த மூவுலகத்தவரும் பார்க்கட்டும். என் மைந்தனைக்கொன்ற கொடியவனாகிய அந்த இந்திரனும் பார்க்கட்டும்"— என்று கூறி அதை ஹோம அக்கினியிலே போட்டான்.

போட்டவுடன் அந்த ஹோம அக்கினியிலிருந்து

ஓர் அசுரன் தோன்றினன். அவன் ஒரு பெரிய அஞ்சன மலைபோலிருந்தான்; பெரிய பெரிய கோரப்பற்களை யுடையவனைப் பார்க்கப் பயங்கரமாகவுமிருந்தான். அவனுடைய அந்த உடல் நாள்தோறும், ஒருவன் எறிந்த பாணம் எவ்வளவுதூரம் செல்லுமோ அவ்வளவுதூரம் வளர்ந்தது.

இவ்வாறு ஓர் அசுரன் வளர்வதை அறிந்த இந்திரன் பயந்து, அவனோடு சமாதானம் செய்து வைப்பதற்காக சப்தரிஷிகளை அவனிடம் அனுப்பினன். சப்தரிஷிகள் அந்த அசுரனிடம்போய்த் தக்கபடி பேசி அவனுக்கும் இந்திரனுக்கும் சமாதானஞ் செய்வித்தார்கள். இருவரும் ஒருவர்க்கொருவர் கெடுதி செய்வதில்லை யென்று ஸத்தியம் செய்துகொண்டார்கள்.

அப்படி யிருக்கையில், இந்திரன் காலம் பார்த்திருந்து அந்த ஸத்தியத்தைக் கடந்து அவ்வசுரனைக் கொன்றான். முன் அடைந்த பிரமஹத்தி தோஷத்தினல் இந்திரன் தன் ஒளியிழந்தானல்லவா? இப்போது ஸத்தியங்கடந்த குற்றத்திற்காக வல்லமையை இழந்தான். அந்த வல்லமையானது வாயுவோடு கலந்தது.

முன் ஒருசமயம் இந்திரன் கௌதம ரென்பவருடைய மனைவியை அடையவிரும்பினன். அதனல் அவன் கௌதமருடைய சாபத்திற்காளானன். அந்தச் சாபத்தினல் அவனுடம்பி லிருந்த அழகு வெளிப்பட்டு அசுவினி தேவரிருவரிடமும் போய்ச் சேர்ந்தது.

இந்திரன் தருமம், ஒளி, வல்லமை, வடிவு இவை இல்லாதவனானதை அறிந்த அசுரர்கள் அவனை வெல்வதற்கு முயன்றார்கள். அப்படியிருக்கையில் அவர்கள் பூலோகத்திலே அசுரர்களாகப் பிறந்தார்கள்; அதருமங்களைச் செய்யத்தலைப்பட்டார்கள்.

அசுரர்களின் கொடுஞ்செய்கைகளைச் சகிக்கமாட்டாமல் பூமிதேவி தெய்வசபைக்குப் போய் அவர்கள் செய்யும் அக்கிரமங்களைக் கூறி முறையிட்டாள். தேவர்கள் துஷ்டர்களான அவ்வசுரர்களை ஒழிக்க மனம் கொண்டார்கள். உடனே அவர்கள் பூலோகத்தில் தங்கள் தங்கள் அம்சங்களோடு மனிதவகுப்பிற்பிறந்தார்கள். தருமதேவதை தன்னிடமிருந்த இந்திரனுடைய ஒளியைக் குந்தியினிடம் சேர்த்தது. அதனால் குந்தியினிடம் தருமராஜா பிறந்தார். வாயு தன்னிடமிருந்த இந்திரனுடைய வல்லமையைக் குந்தியினிடம் சேர்த்தான். அதனால் பீமசேனன் பிறந்தான். இந்திரனுடைய வீரியத்தினாலே அர்ச்சுனன் பிறந்தான். அசுவினி தேவர்கள் தம்மிடமிருந்த இந்திரனுடைய வடிவத்தைப் பாண்டுவின் மற்றொரு மனைவியாகிய மாத்திரியிடம் விட்டார்கள். அதனால் நகுல சகாதேவர்கள் பிறந்தார்கள்.

இவர்களுள் தருமராஜனே நிலத்தின்தத்துவக்கூறு. பீமன் வாயு தத்துவக்கூறு. அர்ச்சுனன் ஜலத்தின் கூறு. அக்கினியின் வடிவமுடைய நகுலன் தீயின்கூறு. சகாதேவனே ஆகாயத்தின் கூறு. இவ்வாறு இந்திரனுடைய பஞ்சபூதக்கூறும் பஞ்சபாண்டவராகப் பிறக்க நேர்ந்தது.

பின் இந்திரனுடைய மனைவி சசிதேவியே வேள்வித் தீக்குழியினின்றுந் தோன்றித் துருபத ராஜனுடைய மகளென வளர்ந்து பாண்டவர்களின் பட்டமகிஷியானாள். ஆதலின் திரௌபதி பாண்டவர் ஐவருக்கும் மனைவியானது குற்றமுடையதன்று. இந்திரனொருவனே ஐவரானான். அவன் மனைவி சசி ஐவராகப்பிரிந்து நின்ற இந்திரனை மகிழ்விக்கத் திரௌபதியாகத் தோன்றி அவ்வாறே மகிழ்வித்தாள்.

பிரகலாத வெண்பா

காப்பு.

அகரம் எழுத்துமுதல் ஆயதுபோல் ஆதி
பகவன்பாற் குண்டென்னும் பான்மை—திகழவரும்
மெய்யறிவின் ஓர்சிறுவன் மேன்மைசொல வான்குருகூர்
ஐயறிவும் வென்றான் அரண்.

நூல்

மாதவஞ்செய் தாங்காரம் வாய்ந்திறைவன் தானேயென்
றோதவஞ்ச கஞ்செய் துலகமுற்றும்—சீதமுடன்
தன்பேர் வழங்கிவரச் சாற்றுவித்தான் ஒண்பறையை
முன்போர் இரணியமூர்க் கன். (1)

(அதனால்)

முனிவர்சுரர் முன்னூல் முறையிழந்தார் உள்ளம்
கனிவருந்தி யேஆதி நாதன்—பணித்தான்
உறவத் திகிலார் ஒழித்தார் முதுமை
மறவேல் எனுநன் மறை. (2)

கற்றபயன் காணார் கனிந்தசைந்து நிற்பஎலாம்
நற்றவையின் நல்கியருள் நாயகனாய்—வெற்றிக்
கடலரவிற் கண்வளருங் காரணனைச் சேர்ந்தார்
திடவரமீந் தான்அவனுந் தேர்ந்து. (3)

(இவ்வரத்தின்படி இரணியனுக்கு)

கடவுள்உயிர் பாசம் கடைத்தேறும் மார்க்கம்
திடவிசும்பி வற்றின்னிலை தேர்ந்து—புடவியொடு
வான்வாழ மாமறையும் வாழ அவதரித்தான்
தேன்வாழ் அலங்கலொரு சேய். (4)

(அப்போது இரணியன்)

ஆனந்தத் தாழ்ந்தான் அசுரர்குரு வைக்கொண்டு
ஞானந் தழைத்ததன் நன்மகற்கு—வானவரும்
சேமமுற்று வாழ்த்தத் திருப்பிரக லாதனெனும்
நாமமிட்டுப் போற்றிவந்தான் நன்கு. (5)

(வரும்)

ம. இராஜகோபால பிள்ளை,
வித்வான் - கோமளேசுவரன்பேட்டை.

ஸ்ரீ ரா ம ா வ தா ர ம்.

(204-ம் பக்கத் தொடர்ச்சி)

பரதாழ்வான் செய்தி இவ்வாறிருக்க, நாட்டைத்துறந்து காட்டுக்குப் புறப்பட்ட ஸ்ரீராமபிரானது வரலாற்றைக் கொஞ்சங் கவனிப்போம்.

சீதா லக்ஷ்மண சகிதமாகப் புறப்பட்ட இரகுநந்தனன் அயோத்திமாநகரத்தின் எல்லையைக் கடந்து வழியிற்றோன்றுங் காட்சிகளின் விநோதங்களைப் பிராட்டிக்குக் காட்டியவாறே நடந்து வந்து புனிதத் தன்மை வாய்ந்த கங்கா நதியின் தீரத்தை யடைந்தனன். அங்கு தவவாழ்க்கையிலமர்ந்திருந்த மகரிஷிகள் இவர்கள் வரவை மிக்க அன்புடன் ஏற்று உபசரித்தனர். இவர்களும் அவர்களைப் பேரன்புடன் வணங்கி அவர்களுடைய அநுக்கிரகத்தைப் பெற்றனர். இவர்கள் வனம் வர நேர்ந்த சம்பவத்தை அறிந்து மகரிஷிகள் இவர்களைத் தேற்றினார்கள். இவ்வாறு இவர்கள் யதீஸ்வரர்களிடம் இருக்கும்போது இவர்களைக் குகன் கண்டான்.

குகனென்பவன் வேட ராஜன். கணக்கற்ற நாவாய்களுக்கு அதிபதி. கங்காநதியின் தீரத்தில் சிருங்கிபேரபுரம் என்னும் ஊரையுடையவன். மகாதீரன். திரண்ட சேனைகளைக் கொண்டவன். உத்தம குணங்களும் சற்கிரியைகளும் பொருந்தியவன். தெய்வகம்பகம்சிறக்கப்

பெற்றவன். கங்கையைக் கடக்கவருவோரை நாவாய் மூலமாக மறுகரை சேர்ப்பவன். இவன் ஸ்ரீராமபிரானைக் கண்டதும் இவனுக்கு அப்பெருமான் விஷயத்தில் அன்பு பெருகிற்று. இப்படி அன்புண்டாவதற்கு யாதொரு காரணமுங் காணோம். நிஷ்காரணமாக ஒருவருக்கு மற்றொருவர் மீது சில சமயங்களில் அன்பு உதிப்பது சகஜம் என்பதை நாம் அநுபவவாயிலாக அறிந்து வருகிறோம். தன்னைக் காண்போர் எத்தகையரா யிருந்தபோதிலும் அவர்களை அப்போதே ரமிக்கச் செய்வதே இரவிகுலோத்தமனான ஸ்ரீரகுநந்தனுக்கு இயற்கை யல்லவா? அதுவே ஒருகால் குகனை மயக்கியிருந்தாலும் இருக்கலாம்.

ஸ்ரீராமபிரானைக் கண்டதும் குகன் தன்னையும் மீறியெழுந்த அன்பினால் இருகண்களிலும் ஆனந்தவெள்ளம் பொங்கித்ததும்ப ஓடிவந்து, அடியற்றமரம்போல் நிலத்தில் வீழ்ந்து, பணிந்தவண்ணம் இருந்தான். அப்போது தசரததநயன் தன் தம்பியின் முகத்தைப் பார்த்தனன். உடனே இலக்ஷ்மணன் குகனை யெழுப்பி "அப்பா! நீயார்? உன்விருப்பம் யாது?" என்று வினவினன். இக்கேள்விக்கு விடைபகரக் கூடாமல் குகன் கண்ணீரால் தன் சரீரம் நனைய இருகைகளையுங் கூப்பிக் கொண்டு சிறிதுநேரம் மௌனஞ் சாதித்தான். பிறகு ஒருவாறு தேறி "சார்பற்றவர்க்குச் சமயத்தில் சார்பாயெழுந்தருளிய தெய்வமே! அடியேன் வேடுவன்; ஏழை; ஏதலன்; கீழ்மகன்; நிரக்ஷரக் குக்ஷி; பேதையேன்; ஆயினும் தங்களைக் கண்டமாத்திரத்தில் என்மனம் காந்தத்தைக் கண்ட இரும்பாய் விட்டது; பிரிவதற்கு அணுவும் இசையவில்லை. இனி என்னை ஆதரிப்பது தங்களுடைய பாரமே" என்று விம்மி விம்மி யழலானான்.

இவ்வேட பூபதியின் அன்பை நோக்கிய ஸ்ரீராம பிரான் அவனைத் தங்களிடம் இருக்கப் பணித்து "தம்பி! இன்றுமுதல் எனக்கு நீ அத்யந்த நேசன்; என் தம்பி இலக்ஷ்மணன் உனக்குந்தம்பி; என் பிரியை சீதை உன் கொழுந்தி; இது சத்தியமென நம்பக்கட வாய்" என்று சொல்லித் தங்களுக்கு அயோத்தியில் நேர்ந்த சம்பவமுற்றும் அவனுக்கு இலக்ஷ்மணனைக் கொண்டு தெரிவித்தனன்.

மறுநாள் குகனை நாவாய் சித்தஞ் செய்யக் கட்டளை யிட்டு, முனிவரிடம் விடை பெற்றுக்கொண்டு, கங்கை யைக் கடக்கலாயினர். அப்போது ஸ்ரீராமபிரான் கங்கை யின் பிரபாவத்தைப் பிராட்டிக்கு அனந்த விதமாக எடுத் துரைத்தனன். மறுகரை சார்ந்ததும் தாசரதி குகனைப் பார்த்து "அன்ப! உன் நன்றி என்றும் மறக்கத்தக்க தன்று. நீ யுன்னிடம் போகக் கடவாய். நாங்கள் வன வாசங்கழித்துத் திரும்பும்போது உன்னைச் சந்திக்கி றோம். நீ மனத்தளர்வடைய வேண்டாம்" என்றனன். குகனும் இராகவனை விட்டு நீங்க இஷ்டமில்லாதவனு னும் பெருமானது உத்தரவுக்குக் கீழ்ப்படிந்தவனாய் நீங்கலுற்றான்.

ஸ்ரீராமபிரான் காட்டின் காட்சியையும் அவ்விடத் தில் திடசித்தத்துடன் தவமியற்றும் முனிவரின் பெரு மையையும் பிராட்டிக்குத் தெரிவித்துக் கொண்டே பரத்துவாச மகரிஷியின் ஆசிரமத்தை யடைந்தனன். அங்கு அம்மகானால் உபசரிக்கப் பெற்று அவர் கூறிய படி சித்திரகூடப் பருவதத்தைச் சேர்ந்து இலக்ஷ்மண னால் இயற்றப்பட்ட பர்கனசாலையில் அனைவருந் தங்கி யிருந்தனர்.

இஃதிவ்வாறிருக்க, பந்து மித்திருடனும் சேனு வெள்ளத்துடனும் தெக்ஷணதிசையை நோக்கி வந்த பாதாழ்வானது செய்கையைச் சிறிது கவனிப்போம்.

இவ்வாறு புறப்பட்ட பாதாழ்வான் வழியிற் றனது அண்ணனுராகிய ஸ்ரீ ராமபிரான் தங்கிச் சென்ற இடங்கள்தோறும் தானுந்தங்கி, அவருண்ட காய் கிழங்குகளைத் தானுமுண்டு கங்காநதியின் தீரத்தை நோக்கிவந்தனன். கங்கையைக் கடக்க வருவோரை யொரு கரையினின்றும் மற்றொரு கரைக்குக் கொண்டு போய்விடும் நாவாய்களுடன் அங்குகாத்திருக்கும் வேட பூபதியான குகன் பெருஞ்சேனை சூழவரும் பரதநம்பி யைச் சிறிது தூரத்திற் கண்டபோதே கடுங்கோபங் கொள்ளலானுன். "ஆம் இதோ ஆடம்பரத்தோடு வருபவன் பரதனே. இவன் தனது தாயின் துர்ப்போ தனைக் குட்பட்டு என் ஐயனை வனத்திற்கோட்டி விட்ட தோடமையாது பின்னும் கெடுதி செய்ய வெண்ணியே மகாதுணிகரத்தோடு வருகிறுன். ஐயோ! பாபம், நானொருவன் மத்தியிலிருக்கிறே னென்பதை யறியான் போலும். 'அடே! பரதா! நானே வேடன். உன் தமயனாது குணதிசயம் மெச்சத் தகுந்ததென்று நேரிற் கண்டேன். அதுவும் ஒரேநாள் பழக்கத்தில்.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்"

என்று உத்தரவேதம் உத்கோஷிக்கின்றது. அப்பெருந் தகையாளனுடன் நீ பலநாள் பழகியும் அவனது காருண் யத்தோடு கூடிய உதாரகுணத்தை யறியாமற் போனுயே. சீ! சீ!!

"பலநாட் பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குட் பாசிபோல் வேர்க்கொள்ளாதே"

என்னும் நீதி வாக்கியத்துக்கு நிதரிசனமானுயே. ஆனுலும் ஆழமறியாது காலிட்டுக் கொண்ட நீ என்னை மீறியன்றோ அப்பாற் போகவேண்டும். வேடர்விடும் சரம் வேந்தர் மீது பாயாதென்று நம்பி விட்டாயோ! நீ கொண்டுவரும்படை யெல்லாம் எலித்திரள். நானே அவற்றை விழுங்கவல்ல அரவம் என்பதைக் கவனி" என்று கையால் தன் மார்பைத் தட்டிக்கொண்டே சிந்தித்தவனுய்த் தன் சேனைகளை நோக்கி "அடா கிங்கிரர்களே?" என்று ஒரு சத்தமிட்டான். உடனே "ஏன்?" என்கிற எதிரொலி பேரிடி பெயர்ந்து விழுந்ததுபோற் கேட்டது.

"ஜாக்கிரதை! ஜாக்கிரதை!! அதோவருகிற பெருங்கூட்டத்தின் மீது கண்ணேக்க மிருக்கட்டும். குல தருமத்தைக் குப்புறக் கவிழ்க்குங் கூட்ட மதுவே. அக் கூட்டத்தினின்று ஒரு துரும்பும் நம்மைக் கடந்து போகலாகாது. நம்மிடம் சகோதரத்துவம் பாராட்டியவர்க்கன்றோ நம்முயிரைத் தத்தஞ் செய்யவேண்டுவது" என்று தன் படைக்கு உத்தரவிட்டுக் குகன் பரதாழ்வானை உற்று நோக்கிநின்றுன்.

பரதனே மாசடைந்த மேனியனுய், மரவுரியுடுத்து, தென்றிசை நோக்கிக் கூப்பிய கையுடன் துக்கக் குறி முகத்தில் விளங்க வரும் கோலமானது குகனுடைய கண்களுக்குத் தென்பட்டது. "என்ன! பரதன் இக்கோலமாக வருகின்றுனே. நாம் அவன் விஷயமாக நினைத்ததெல்லாம் தப்பே. எம்பெருமானுகிய ஸ்ரீராமப்பிரபுவின்

இரத்த சம்பந்தம் பெற்றவரும் பிழை செய்ய முன் வருவரோ? நானே எதிர் சென்று அவனைக்கண்டு தெளிகிறேன்" என்று தனக்குள் எண்ணிக்கொண்டு பரதாழ்வான் முன் விரைந்து சென்றான்.

குகன் தன் தமையனாருக்குகந்த நேசன்என்று தெரிந்து கொண்ட பரதநம்பி அவனெதிரே முந்தினன். இருவரும் ஒருவரை யொருவர் நோக்கியதும் அவர்கள் கண்களிலிருந்து நீரானது ஆறுய்ப் பெருகியது. பேசநாவெழாதவராய்த் தழுவிக் கொண்டனர். அப்போது, தழுவிய வேடராஜனான குகன் தாமரைக்கண்களை யுடையவனான பரதாழ்வானை நோக்கி " எழுவினும் உயர்ந்த தோளாய்! நீ இவ்வளவுதூரம் நகரத்தைத் துறந்து வந்த காரணம் யாது?" என்று வினவினன்.

பரதன் "ஐயனே எங்கள் தந்தையான சக்ரவர்த்தியார் என் தாயாரிடம் வைத்த ஆசையினுல் மதிமயக்கங் கொண்டவராய் முறைகேடான ஏற்பாட்டுக்கு இடங் கொடுத்தார். அதை நிவர்த்திசெய்து முறைப்படி அரசனாக வேண்டிய என்தமயனாரை அழைத்துப் போகவே வந்தேன்" என்றான்.

இவ்வார்த்தையைக் கேட்டதும் குகன்,

"தாயுரை கொண்டு தாதை யுதவிய தாரணிதன்னைத்
தீவினை யென்ன நீத்துச் சிந்தனை முகத்திற் றேக்கிப்
போயினை யென்ற போழ்திற் புகழினோய் தன்மை கண்டால்
ஆயிரம் ராமர் நின்கேள் ஆவரோ தெரியி னம்மா"

என்று சொல்லிப் பரதாழ்வானை மார்புற இறுகக்கட்டிக் கொண்டு கண்ணீரால் அவனை அபிஷேகஞ்செய்தான்.

பிறகு இவன் யார் என்று வினவிய பந்து வர்க்கத்தினர் முதலாயினோர்க்குப் பரதன் குகனுடைய வரலாற்

றைக் கூறினன். அவர்கள் சந்தோஷித்து அவனை ஆசிர்வதித்தார்கள்.

பிறகு குகன் பரதனையும் அவனுடைய சேனு சமூகத்தையும் படகிலேற்றிக் கொண்டு கங்கையைக் கடந்து, ஸ்ரீராமபிரான் தங்கியுள்ள இடத்திற்குக் கொண்டு வந்து விட்டான்.

பரதனும் ஸ்ரீராமபிரானும் சந்தித்தனர். ஸ்ரீராமபிரான் அயோத்தியை விட்டுப் பிரிந்தபின் அங்கு நடந்த சகலமும் தெரிந்து, தந்தையின் மரணத்துக்கிரங்கி, பரதனுக்குச் சொல்லவேண்டிய புத்திமதிகளைச் சொல்லி அயோத்திக்குப் போய் அரசாண்டுவரத் திட்டஞ் செய்தனன். பரதன் அதற்கு உடன் படவில்லை. கடைசியில் ஸ்ரீராமபிரான் பரதனுக்குத் தன் பாதுகையை யளித்தனன். பரதன் அப்பாதுகைக்குப் பட்டங்கட்டி, நந்தியம்பதியில் தங்கித் தவம் பூண்டிருந்தான். ஸ்ரீராமபிரான் அக்கணமே தெக்ஷணதிசையை: நோக்கிப் புறப்பட்டனன். (வரும்)

ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு.

திருவாங்கூரில் சவறையென்னும் ஓர் ஊரில் ஒரு நாயர் தனது மாடுவிற்று வைத்திருந்த நூறு ரூபாய் நோட்டை அவனது மூன்று வயதுக் குழந்தை கிழித்துச் சேதமாக்கி விட்டது. அது கண்ட தகப்பன் அதனைத் தரையில் அடித்துக் கொன்று விட்டான். அதுகண்டதாய் தன் கைக்குழந்தையுடன் கிணற்றில் விழுந்தாள். அதனைக்கண்ட நாயரும் கிணற்றில் விழுந்திறந்தான்.

பணத்தை நாம் சம்பாதிக்கலாம் நம்மைப் பணம் சம்பாதிக்க முடியாது. பணம் போய்விட்டதே என்கிற ஆத்திரத்திற்கு இடங்கொடுத்தனுல் ஒரு குடும்பமே அழிய நேர்ந்த விபரீதம் காண்க.

மனித எண்ணத்தினும் தெய்வ எண்ணமே பெரிது

மரமல்லிகை என்றொரு மரமுண்டு. அது அளவற்ற புஷ்பங்களைப் பிரதி தினமும் புஷ்பிக்கின்றது. புஷ்பங்களோ பார்வைக்கு மிகவும் நேர்த்தியாகத் தோன்றுகின்றன. ஆனால் மணமில்லை. புஷ்பங்களும் பயன் படாமலே சிந்திவிடுகின்றன. அதுபோல மனிதவகுப்பிலுதித்த நமக்கும் பொதுப்பட எண்ணங்களாகிற புஷ்பங்கள் மலர்வதுண்டு. அப்புஷ்பங்களும் பெரிதும் பயன் படாமலே போய்விடுகின்றன. சிறிது பயன் படுவதும் நமக்கேற்பட்டுள்ள பகுத்தறிவின் விசேஷத்தாலேயாம்.

இவ்விஷயமாக நமது பெரியோர் சொல்லியவைகளையும் நாம் கவனித்தல் வேண்டும்.

ஔவையார்.

“ உண்பது நாழி உடுப்பது நான்கு முழம் (ஆயினும்)
எண்பது கோடிநினைந்தெண்ணுவன (ஆதலால்) கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்தனையுஞ் சஞ்சலமே தான் ” என்றார்.

இது சத்தியமான பேச்சு என்பதை நாம் ஒவ்வொருவரும் அநுபவத்தில் கண்டு வருகிறோம். இவ்வசனத்

தை உறுதிப் படுத்தத் தாயுமானவரும்,

"எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏழைநெஞ்சம்
புண்ணாகி விட்டதினிப் போதும் பராபரமே" என்றார்.

திருத்தக்க தேவரும் "அவலம் பூத்து" என்றார். ஆங்கில வித்வசிரோமணி யொருவர் "நமது எண்ணங்கள் அவ்வளவும் முற்றுப் பெறக்கூடுமாயின் இவ்வுலகம் இப்போதிருப்பதைவிடப் பலமடங்கு பெரிதாக வேண்டும்" என்று கூறியிருக்கின்றார்.

இந்த அபிப்பிராயங்கள், "நமக்கு இயல்பாக உதிக்கக் கூடிய பயனற்ற எண்ணங்களை அவ்வாறு உதியாதிருத்தற்கான சாதனங்களை அப்பியசிக்கவேண்டும்; எல்லாம் பகவானுடைய எண்ணப்படியே நடைபெறும் என்கிற உறுதியை மேற்கொள்ளவேண்டும்;

"என் செயலாவ தியாதொன்றுமில்லை யினித்தெய்வமே
உன் செயலேயென் றுணரப்பெற்றே னிந்த வூனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்றுமில்லை பிறப்பதற்கு
முன்செய்த தீவினையோ விங்ஙனே வந்து மூண்டதுவே."

"ஒன்றை நினைக்கில் அதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்"

"அவனன்றி யோரணுவும் அசையாது"

என்னும் மேலோருடைய உபதேசங்களைச் சிந்தித்தல் வேண்டும்" என்னும் முடிவை நமது ஞாபகத்தில் வேரூன்றச் செய்யும்.

"நாமொன்று நினைக்கத் தெய்வம் தானொன்று நினைக்கும்" என்பது பழமொழியன்றோ? இது சம்பந்த

மாக யாவருக்குந் தெரிந்த ஒரு சிறு கதையை இங்கு ஞாபகப் படுத்துகிறேன்.

கதை.

பலராமர் தமது அருமைப் புத்திரியாகிய வத்ஸலையை மிகுந்த செல்வமுள்ள இடத்தில் மணஞ்செய்விக்க வேண்டுமென்று விரும்பினர். அத்தகைய இடம் அஸ்தினபுரியே என்றுந் தீர்மானித்தார். அஸ்தினபுரியை ஆள்பவன் துரியோதன மகாராஜன். அவன் வணங்கா முடியுடையவன். அவனிடத்துள்ள சம்பத்து அளவுக்கு மிஞ்சியது. பிரபல வீரதீர ஞானவான்களாகிய பீஷ்மர், துரோணர், கிருபர், விதுரர் முதலிய மேதாவிகளும் அவனையே சூழ்ந்திருந்தனர். பல பேசுவானேன்? செல்வத்தில் அவனுக்கு ஒப்பானவர்களாவது மேலானவர்களாவது இல்லவே இல்லை. இப்படிப்பட்ட மகாராஜனுடைய பிள்ளைக்குத் தமது பெண்ணைக் கொடுத்தால் எப்படிப்பட்ட குறைவு மிராது என்று பலராமர் எண்ணினர்.

ஸ்ரீகிருஷ்ண பரமாத்துமாவுக்குப் பலராமருடைய இஷ்டத்தைப் பூர்த்திசெய்ய மனமில்லை. சர்ப்பத்தினிடம் மாணிக்கமிருப்பினும் அதை எவர் நேசிக்கத் துணிவர்? துஷ்டரிடம் செல்வமிருந்தாலும் அறிவுடையோர் அவர்களைப் பொருட்படுத்த மாட்டார்கள். சுயபுத்தியு மின்றி யொருவர் சொல்புத்தியுங் கேளாத பரம துஷ்டனகிய துரியோதனனுடைய சம்பந்தங் கூடாதென்பது கிருஷ்ண மூர்த்தியின் கருத்து. ஆகவே நற்குணமும் நற்செயலும் பொருந்திய பாண்டவரையே வத்ஸலை உறவு பாராட்டவேண்டு மென்று அவர் இச்சித்தார்.

ஆகிலும் தமது அண்ணருடைய மனதை நேரே புண் படுத்த இணங்காதவர் போல நடிக்கலானார். சர்வஞ்ஞரா கிய அவரால் ஆகாத காரியம் உண்டோ? உடனே அவர் வத்ஸலே இருந்த இடத்தில் ஒரு ராக்ஷஸனை வத்ஸலே யாக்கிவைத்துவிட்டு அவளை ஒருவருக்குந் தெரியாமல் அழைத்துக் கொண்டுபோய் அர்ச்சுனன் மகனாகிய அபி மன்யுவுக்கு அக்கினிசாக்ஷியாய் மணமுடித்துவிட்டார்.

பிறகு பலராமர் இஷ்டப்படி புதிய வத்ஸலையைத் துரியன் மகனான இலக்ஷ்மணனுக்கு விவாகம் செய் யும்படி ஏற்பாடு செய்தார். இந்த விவாகத்தை நடத்த சகுனியே முன்னின்றான். அப்போது துரியோதனன் தனது முழு சைனியத்துடன் தன் மகன் இலக்ஷ்ம ணனை அலங்கரித்துக் கொண்டு துவாரகைக்குப் புறப் பட்டான்.

வழியில் பகவானுடைய சங்கற்பப்படி ஒரு தங்கு மிடம் ஏற்பட்டது. அது பார்ப்பவர் கண்களைப் பறிக்கத் தக்கதாயிருந்தது; என்றுங் காணாத அற்புதப்பொருள் கள் நிறையப் பெற்றிருந்தது; காண்போரது நினைவிற் றோன்றும் வஸ்துக்களெல்லாம் நேரில் விளங்கப்பெற்று மிருந்தது. "இவ்விடத்தில் இஷ்டமுள்ளவர்கள் தங் கள் பழைய வஸ்துக்களைக் கொடுத்துவிட்டு விலையேறப் பெற்ற புதிய வஸ்துக்கள் எவையானாலுஞ் சரி, அவற் றைப் பெற்றுக் கொள்ளலாம்" என்று பெருத்த எழுத் தில் எழுதப்பட்ட பலகையொன்று தொங்கவிட்டு மிருந்தது.

இப்படிக்கெல்லாம் தோன்றுவது, நினைத்த வுரு வெடுக்கவல்ல ராக்ஷஸர்களின் வேலைப்பாடு. அவர்கள் பக

வானுடைய கட்டளையை நிறைவேற்றக் கடமைப் பட்டவர்களல்லவா?

துவாரகைக்குப் புறப்பட்ட துரியோதன மகாராஜன் இந்த அதிசயக்காட்சியைப் பார்த்ததும் பரமானந்தங் கொண்டு "ஹா! நமது சம்பந்தி பலராமர் நம்மைக் கௌரவப் படுத்த என்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறார்" என்று மெச்சிக் கொண்டான். உடனே அவ்விடத்தில் அவனுடைய சேனைகளும் பந்து மித்திரர்களும் ஒருவர் மேல் ஒருவர் விழுந்தபடி தங்கள் தங்கள் பழைய ஆடையாபரணங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய ஆடையாபரணங்களைப் பெற்றுக்கொண்டனர். அவைகளை வெகு சந்தோஷத்துடன் அணிந்து கொண்டு துவாரகையை நெருங்கினர். நெருங்கியதும் இவர்கள் அணிந்திருந்த துணிமணிகளெல்லாம் மாயமாய்ப் பறந்து போயின. எல்லோரும் இப்போது கொல்லாவிரதியாது கடவுளரின் கூட்டத்தை யொத்து விளங்கினர்கள்.

பலராமர் இவர்களுக்குத் தக்க ஆதரணைசெய்து விவாகச் சடங்கை முடித்தனர். பிள்ளை வீட்டார் மருவிட்டனர். துரியோதனன் தன் பெருமைக்குத் தக்கபடி தனது சைனியங்களுக்கும் பந்து மித்திரர்களுக்கும் சம்பந்தி வீட்டாருக்கும் திருப்தியாகும்படி பெரிய சமையல் மண்டபம் ஒன்று அமைத்து அதில் பலவகையான பட்சண பலகாரங்களுடன் போஜனம் தயார் செய்யவைத்தான். போஜனம் தயாரானது கண்ட புதிய வத்ஸலை தன் மாமியிடஞ் சென்று "அத்தையம்மா! எனக்குப் பசி யதிகமாயிருக்கிறது. என்னை சமையலறைக்கு அனுப்புங்கள். எனக்கிஷ்டமானதை நானே உண்டு வருகிறேன்.

ஒருவர் பரிமாற உண்பது எனக்கு வெட்கமாயிருக்கிறது" என்று களைப்புமேலிட்டவள்போல் சொல்லினுள். மாமியும் தன் மருமகள் கூச்சமின்றித் தன்னிடம் அன்புடன் வந்து பேசுவதற்கு ஆனந்த முற்று மடப்பள்ளிக்குத் தன் மருமகளை யழைத்துக்கொண்டு போய் அங்கிருந்தவர்களை யெல்லாம் வெளியே அனுப்பிவிட்டு "அம்மா குழந்தாய்! நீ கூச்சப்படாமல் உனக்கிஷ்டமானபடி யுண்டுவா" என்று சொல்லித் தானும் அப்புறம் போனுள்.

குழந்தை வத்ஸலை அந்தப் பெரிய மடப்பள்ளியில் நுழைந்ததும், கதவைத் தாளிட்டுக் கொண்டு கணக்கற்ற பேர்களுக்குச் செய்து வைத்திருந்த பட்சண பலகாரங்கள் அவ்வளவையும் ஒரே வாயாக உட்கொண்டு, பீப்பாய்களில் நிறைத்து வைத்திருந்த ஜலமுழுதும் பானஞ் செய்து விட்டுப் பெரிய ஏப்பமிட்டுக்கொண்டு வெளியே வந்தாள். இதைக் கண்ட துரியோதனனுதியர்க்குப் பயம் மேலிட்டு விட்டது. உடனே ஒருவருடனும் சொல்லாமல் வந்த வழியை நோக்கி ஓட்டம் பிடித்தார்கள். இதனுல் தெய்வ எண்ணமே பெரிது என்பதை நாம் தெரிந்து கொண்டோம். ஆகையால் வீண் எண்ணங்களுக்கு நாம் இடந்தராமல் கடவுள் எண்ணப்படியே யாவும் நடை பெறுமென்று நம்பி அவர் விஷயத்தில் விசுவாசத்தை வைத்து ஒருவருக்குந் தீங்கு நாடாமல் நடப்போமாக. சுபம்.

ம. இராஜகோபால பிள்ளை,
வித்வான், கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

'கெடுவான் கேடு நினைப்பான்'

அல்லது

'நினைக்கும் கேடு தனக்கு'

*'மறந்தும் பிறன்கேடு சூழற்க, சூழின்
அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு'—குறள்.

ஊத்துக்குளி என்னும் ஊர், இப்போது ஸ்டேஷனை யடுத்து மூன் அமைந்திருப்பது போன்று கொஞ்சகாலத்திற்கு மூன் அமைந்திருக்கவில்லை. இரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஊருக்குச் சுமார், இரண்டரை மைலுக்கு மேற்பட்ட தூரமுண்டு. இரண்டு பக்கங்களிலும் சப்பாத்திக்கள்ளிகளாலும் மரங்களாலும் நிறைந்த ஓர் இருண்ட சிறுவழியே, ஊருக்குச் செல்லும் நேரான பாதையாக இருந்தது. இருட்டுக் காலங்களில் திருடர்களால் வழிப்பறிகளும் அங்கு அநேகமாய் நடப்பது வாடிக்கை.

சுந்தரன் என்கிற ஒரு வியாபாரியிடத்தில் புகையிலை விற்றபணம் மூவாயிரம் ரூபாய்கள் வரை சில்லறைநோட்டுக்களும் பணமுமாகவே இருந்தன. அவனைத்தவிர வேறே ஒருபிராணியும் அன்று அந்த ஸ்டேஷனில்

---

* பிறருக்கு ஞாபகமில்லாமலேனும் கெடுதியை நினைக்க வேண்டாம்; அவ்வாறு எண்ணினால், அந்த எண்ணத்தைச் கொண்டவனுக்குத் தருமமானது கேட்டை விளைவிக்கும்.

இறங்கவில்லை. யாரேனும் ஸ்டேஷனில் வேலை செய்யும் போர்ட்டர்களில் ஊருக்குச் செல்லுகின்றவர்கள் உண்டா என்று விசாரித்ததில் போகவேண்டிய யிருவர் மாலை ஆறுமணிக்கே போய் விட்டனரென்று தெரிந்தது. அதனால் அவன் என்ன செய்வது? எவ்வாறு தனித்துச் செல்வது? என்றெண்ணி, ஸ்டேஷன் மாஸ்டரிடஞ் சென்று செய்தியைச் சொல்லி இரவு தங்குவதற்குச் சௌகரியமான இடந்தரவேண்டுமென்று கேட்டான். அவர் மனமுவந்து "எவ்விஷயத்திற்கும் ஆலோசிக்க வேண்டியதில்லை யென்றும், தமது வீட்டிலேயே தங்குவதற்கு இடமளிக்கப்படு மென்றும், பணத்தைப் பற்றிய கவலை அணுவும் வைக்கவேண்டாமென்றும், கூறினர். பிறகு சுந்தரன் அங்குத் தங்குவதாக நிச்சயித்துச் சாப்பாட்டை முடித்துக் கொண்டுவந்து அவருடன் கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்து, பிறகு விடியற்காலம் நாலரை மணி சுமாருக்குத் தன்னை எழுப்பி விடும்படி சொல்லி விட்டுப் படுக்கப் போய்விட்டான்.

சுந்தரன், தனித்த ஒரு விடுதியிற் சென்று படுத்துச் சுகமாக நித்திரை போனன். ஸ்டேஷன் மாஸ்டரும் தம் படுக்கை அறைக்குச்சென்றார். அங்கு அவருக்குச் சரியாக உறக்கம் பிடிக்கவில்லை. மனத்தினிடமாக பலவிதமான எண்ணங்கள் முளைத்தெழுந்தன. அவர் பின்வருமாறு தமது நிலைமையைப்பற்றி ஆலோசிக்கலானர்.—

பதினைந்து வருடங்களாக நான் இந்த ஸ்டேஷன்மாஸ்டர் உத்தியோகத்தில் அதி சிரமத்துடன் உழைத்து வருகின்றேன். மாதம் இருபது ரூபாய் சம்பளம்வந்தும் ஏதும் பயனின்றிச் செலவழிந்து விடுகின்றது.

ஆவியை ஒடுக்கி இதுநாள் பரியந்தம் சேமித்த தெல்லாம் கூடி கேவலம் ஐந்நூறு ரூபாய்களே. எனது பெரிய பெண்ணிற்குப் பதின்மூன்றும் வயது நிரம்பப் போகின்றது. இளையவளுக்கோ பதினொன்று நிறைந்து விட்டது. பிள்ளைகளையோ படிப்பிக்கப் பள்ளிக்கு அனுப்பவேண்டும். இரண்டு குழந்தை களுக்கும் ஒரு முகூர்த்தத்தில், கல்யாணத்தை நடத்தினால் தான் சிறிது காலத்திற்காவது நன்மதிப்போடு நிம்மதியாக இருக்கலாம். சற்றும் ஓய்வின்றி இன்னும் பதினைந்து வருடங்கள் முற்றும்வரை உழைத்தாலன்றோ மற்றொரு ஐந்நூறு ரூபாய்கள் சேர்க்கலாகும். இந்தப் பெண்கள் கலியாணத்தை அந்தக் காலம் வரை நிறுத்தி வைக்கமுடியுமா? "சிந்தனையின்றி மேலைக்குத் தாலிகட்டுகின்றேன் கழுத்தே சுகமாயிரு" என்னும் விந்தை மொழி நம்போன்றவர்களின் பொருட்டே ஏற்பட்டதுபோலும். இக்கலிகாலத்தில் நியாயத்தையும் சத்தியத்தையும் அனுசரித்து நடந்தால் இக்கட்டில் சிக்குவதன்றிச் சில மூடர்கள் கூறுவதுபோல நலமான வழிகளில் சம்பாதித்து மேனிலையடையலா மென்பது வீண்பேச்சே. சூதும் வாதும் செய்து ஏதேனும் பணம் சேர்த்தால் தானுண்டு. தானாக வரும் ஸ்ரீதேவியை காலால் உதைத்துத் தள்ளுவாருமுண்டோ? ஆகவே இச்சமயத்தைக் கைநழுவ விடாமற் படிக்கு இங்குவந்துபடுத்திருப்பவன் கொண்டு வந்திருக்கும் பணம் அவ்வளவையும் நம்முடைய வசஞ் செய்துவிட்டால், செம்மையாக இருக்கும் என்று கெடு மதிக்குத் தக்கவாறு முடிவு செய்து கொண்டார்.

சிந்தனை பலப்பட்டது. துணிந்து சதி செய்து

தன் கருமத்தை அதிவிரைவில் முடிக்க வேண்டுமென்று நினைத்தார். எவ்வாறு அதைச் செய்து முடிப்பதென்பதைப் பற்றிச் செவ்வையாக ஆலோசித்தார். கெட்ட விஷயங்களுக்குத் தக்க யோசனைகள் சட்டென்று உதிப்பது வழக்கமல்லவா? அதுபோலவே அவர் மனத்திற்குப் பளிச்சென்று ஒரு சூழ்ச்சி தென்பட்டது. உடனே படுக்கையை விட்டுச் சடக்கென்று எழுந்திருந்து உத்தரீயத்தை மேலே போட்டுக்கொண்டு மெத்தென நடந்து ஓசைப்படாது கதவைத்திறந்து கொண்டு வெளியில் வந்து மாசின்றித்திகழும் நிலவில் ஸ்டேஷனுக்குத் தெற்குக் கால்மையில் தூரத்தில் வசிக்கும் குறவர்களின் குடிசையைக் குறிக்கொண்டு நடந்தார்.

குடிசைக்குச் சமீபமாகக் குறுகினவுடன் கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போலவும் தேடப்போன செடி காலிற்சுற்றிக்கொண்டது போலவும் தாம் நாடிவந்த, காடனும் மாடனும் வேண்டியவரை கள்ளை மிகுதியும் குடித்து வெறியுடன் உட்கார்ந்து உரையாடிக்கொண்டிருப்பதைக் கண்ணுற்றார். ஸ்டேஷன்மாஸ்டரைச் சந்தித்தவுடன் அவ்விருவரும் எழுந்திருந்து கைகட்டி நின்று, 'ஸ்வாமி! புத்தி!' என்றார்கள்.

அதற்கு ஸ்டேஷன் மாஸ்டர், 'அடே! ஒரு பெருத்த வேட்டை அகப்பட்டு இருக்கின்றது! நீங்கள் இருவரும் கொஞ்சம் துணிகரமாய் வேலை செய்வீர்களானால் வெகு சுலபத்தில் உங்களுக்குத் தலைக்கு நூறு நூறு ரூபாய் கிடைக்கும். என்ன சொல்லுகிறீர்கள்?' என்று கேட்டார். அதற்கவர்கள், 'எஜமானே, உத்தரவானால் எந்தவேலையானாலும் நிஜமாகச்செய்து முடித்

184333

துப் போடுகிறோம். ஊம்!—என்று ஊதிப்போடுகிறோம். சுவாமி! சொல்ல வேண்டியதைச் சீக்கிரஞ் சொன்னால் சரிங்க' என்று வணங்கி நின்றார்கள்.

உடனே ஸ்டேஷன் மாஸ்டர் நம்வீட்டில் ஓர் ஆள் வந்து தங்கியிருக்கின்றான். அவனிடம் மூவாயிரம் ரூபாய் கொண்ட முடிப் பொன்றிருக்கிறது. அவனை யெப்படியாவது சமாதனப்படுத்தி ஒரு மணி சுமாருக்கு ஊத்துக்குளிக்குப் பணத்துடன் சேர்த்து அனுப்புகின்றேன். நடுவழியில் நீங்கள் ஒருபெரிய மரத்தின் மறைவில் படுகுழிதோண்டி வைத்துக் கொண்டிருந்து அவன் வந்தவுடன் சவமாம்படி ஒரே வெட்டில் அவனை இருதுண்டாக்கி அவன் மேற்புறமாக இடுப்பில் கட்டியிருக்கும் தோற்பையை யவிழ்த்துக் கொண்டபின், சவத்தைப் படுகுழியில் வீழ்த்திச் சம்சயமில்லாதபடி ஆழப்புதைத்துவிட்டு வந்து சேருங்கள். தெரிந்ததா சங்கதி? ஜாக்கிரதை! சொஞ்சம் விஷயம் வெளியானாலும் நாம் ஒருவரும் மிஞ்சமாட்டோம். தொலைக்க முடியாத தீங்கு தலைக்கே வந்து சேரும். உஷாராக நடந்து கொள்ளுங்கள். எச்சரிக்கை! எச்சரிக்கை!' என்று சொல்லி அவர்களை அனுப்பிவைத்தபின், தம் மனத்தெண்ணம் ஈடேறியதாக நினைத்துக்கொண்டு வீடு போய்ச் சேர்ந்தார்.

அக் குறவர்களும் அவ்வாறே, ஆயுதங்களுடன் சென்று அங்குள்ள ஓர் ஆலமரத்தின் மறைவில் ஆழமான குழியொன்றைத் தோண்டி வைத்துவிட்டுச் சுந்தரன் வரவை யெதிர்பார்த்தவர்களாய்ப் பதி விருந்தனர்.

இரவு ஒரு மணிக்கு ஸ்டேஷன்மாஸ்டர் அங்குள்ள பெரிய கடியாரத்தைச் சரியாக ஐந்து மணியாகத் திருப்பிவைத்துவிட்டுச் சுந்தரன் படுத்திருந்த அறையண்டை வந்து, 'ஐயா! கோபிக்குப் போகிற ஐயா!' என்று உரத்த குரலில் கூவிக் கதவையும் நாலைந்து முறை பலமாகத்தட்டினார். அவன் அவசரமாகக் கண்விழித்து எழுந்து கதவைத் திறந்தான். அப்போழ்தவர் "நாலரை மணிக்கு எழுப்பும்படி சொன்னீர்கள். அயர்ந்து உறங்கி விட்டீர்கள். இப்போழ்து மணி ஐந்து அடிக்கப் போகின்றது. தங்காது புறப்படுங்கள்" என்று சொன்னார். அவர் சொல்லி வாய் மூடுமுன் 'டிங், டாங், டிங், டாங், டிங், என்று அங்கிருந்த கெடியாரத்தில் கணீரென்று மணி ஐந்தடித்தது.

உடனே சுந்தரன் தன் வால்பையை யெடுத்து மடியிற் கட்டிக்கொண்டு அவர் அன்பிற்குப் பெரிதும் வந்தனமளித்து அத்யந்த உபசரிப்புடன் அவரிடம் பிரியாவிடை பெற்றுக் கொண்டு மிகவும் விரைவாக ஊத்துக் குளியை நோக்கிப் போனான்.

இன்றைக்குப் பௌர்ணமை தினமாகையால் முழு மதி பட்டப்பகற்போற் பிரகாசித்துக் கொண்டிருந்தது. புறப்பட்ட வேகத்தில் சரியாகப் பாதி வழிக்கு வந்து சேர்ந்திருப்பான். அச்சமயம் அவனுக்கு மனத்தில் பீதி தோன்றிற்று. மார்பு படபடவென் அடித்துக் கொண்டது. மேல் நடக்கக் கால்கள் பின்னுக்கு இழுத்தன. கொலைக்களத்திற்கு வலித்துச் செல்வது போன்ற ஓர் உணர்ச்சி அவன் மனத்தினிடமாக உண்டாயிற்று என்ன இது! வீண்பயம்! மடியில் கனமிருந்தால் வழியில் அச்சம் தோன்றும் போலும்! சீ! சீ! இது கெட்டது! காரணமின்றி வீண்கலவரத்திற்கு இடந்தாலாகாது! என்று திடப்படுத்திக் கொண்டு

மற்றும் கொஞ்சதூரம் சென்றான். அகம் மிகவுங் குழம்பிப் போயிற்று. பயம் அவனைப் பாதித்தது. ஏதேனும் இது சூதாயிருக்குமோ என்று எண்ணி ஆகாயத்தை அண்ணாந்து நோக்கினான். சந்திரன் நடுமையத்தைக் கடந்து கொஞ்ச தூரமே வந்திருந்தான். மணி ஒன்றரை அல்லது இரண்டிற்கு மேலிராது என்று கணித்தான். அசைவின்றி நிசப்தம் குடி கொண்டிருந்தது. வஞ்சனையேயிது என்று விளங்கியது. மெய் நடுங்கவும், கால்கள் உதறல் எடுக்கவும் ஆரம்பித்தன. பசபசவென்று செய்வதறியாது இவன் விழிக்கும் அச்சமயத்தில் யாரோஇருவர் அதிக தூரத்தில் "கசுகுசு" என்று பேசுவது அவன் காதிற்பட்டது. அஞ்சியநெஞ்சுடனிருக்கும் அவனுக்குக் கொஞ்சதூரத்தில் கள்ளிக்கு நடுவில் ஆலமரத்தின் மறைவிலிருந்து வெள்ளையாடையொன்று வெளியில் பறந்து மறைந்தது. இவைகளைக் கண்டவுடன் அவனுக்கு சட்டெனத் தேகமெல்லாம் வெயர்த்தது. அவன் மனம் இடிந்து போயிற்று. அவன் அவ்விடத்திலேயே உட்கார்ந்து மெள்ள, மெள்ளக் கஷ்டப்பட்டுத் தள்ளாடிக் கொண்டே சென்று அருகிலிருந்த ஓர் வேப்பமரத்தின்மீது சிரமப்பட்டு ஒருவாறு ஏறிக் கொண்டான். ஆங்கிருந்து ஆலமரத்தின் பாங்கில் நோக்கினான். ஆ! ஆ! அவ்விடத்தில் ஒருபால் ஒரு பெரும் பள்ளம் தோண்டப்பட்டிருந்தது. அதையடுத்துக் கையிற்கத்தியுடன் இருவர் பார்த்தவர் மனம் பதைப்புறும் வண்ணம் வீற்றிருந்தனர். இவைகளைக் கண்ட அவன் நெஞ்சு வாதனைக்குள்ளாயிற்று.

அம்மரத்தினிடமாக உயர்ந்து, செம்மையாகப் படிந்து, பாதையின் குறுக்கே போயிருந்த, கிளையோடு கிளையாய்ப் படுத்துக் கொண்டு, அவன் உத்திரீயத்தைக் கிழித்து, கிளையோடு சேர்த்துக் கனமாக மூன்றுகட்டுகள் கட்டி விட்டு, இங்கேதான் இவ்வித மிருப்பதை எங்கே எவரேனும் கண்டு கொண்டு விடுவார்களோ என்னும் காரணத்தினால் நடுங்கி, கைகளாற் கிளையை கெட்டியாகப்

பற்றியவண்ணம், தனது இஷ்டதேவதையாகிய முருகனை, "கந்தா! குமரா! முருகா! ஆபத்பாந்தவா! அநாதரக்ஷகா! ஆறுமுகவடிவேலவனே! பக்தர்க் கிரங்கும் பரமகருணாநிதே! பாலசுப்பிரமண்யா! இவ்வேழையை இப்பெரிய ஆபத்திலிருந்தும் மற்றும் நேரிடக்கூடிய எவ்விதத் துன்பங்களிலிருந்தும் காத்து, தீ நெறி விலக்கி நன்னெறி செலுத்தி இரக்ஷிப்பது உன் பொறுப்பு! அப்பனே!" என்று மனத்தில் தியானித்திருந்தான். அப்பொழுது காடனும், மாடனும், பேசிய பேச்சுகள் செவ்வையாய் அவன் செவியிற் பட்டன.

காடன்:—"அடே! மாடா! என்னடா இது! இன்னும் அந்த ஆசாமி வரவே இல்லையே! இந்தப் பாளாப் போன ஸ்டேஷன் மாஸ்டர் ஏதாவது சூது கீது பண்ணியிருப்பானே! என்னவோ தெரியலையா. நம்மை இங்கே இப்படி இருக்கச் சேஞ்சிபோட்டு எங்கேனும் போலீசியாரைக் கூட்டியாந்து இவுங்கோ யாரையோ கொலைபணாரத்துக்குக் காத்திருக்காங்கோ பாருங்கோ இன்னு சொல்லி புடிச்சுக்குடுத்துட்டா என்டாபண்ரது. எனக்கென்னவோ பயமாத்தானிருக்குது. இது எப்படி முடியுமோ தெரியலேடா. ஆண்டவன் நல்லவழி விடோனுமடா! மணி இரண்டுக்குமேலே மூணுகப் போராதேடா எனக்கென்மோ நல்லாயில்லே போல தோணுது மனசு! சும்மா ஏனோ கலவரப்படுது."

மாடன்:—"சந்தேகமில்லாமே நீ எந்தநா வாந்த நாளு. நெனச்சதுக்கெல்லா உனக்குச் சந்தேகந்தா. சரிதா. இருக்கட்டு. இதுக்கு முன்னடி எப்பவாவது இவர் இப்படி செஞ்சதுண்டா? அவருக்கு. நமக்குமென்ன விரோதமா? ஒண்ணுமில்லையே? அப்படி யெல்லாமிருக்காது. அந்த ஆசாமியே சந்தேகமில்லாமல் அனுப்பிக் கொடுக்கவேணுமா? அதற்குக் கொஞ்சம் நேரந்தானாகும் நீ சுத்த பைத்திக்காரனடா. ரொம்ப கடந்து அவசரப் படறயே. இந்த விசயங்களுக்கெல்லாம் எத்தனை சாக்கிரதையா யிருக்கவேனும் தெரியுமா? கொஞ்சங்கூட

யோசனையே இல்லாமல் பேடிப்பசங்களைப் போல என்னென்னமோ பேத்தராயா உன் வளக்கமே இப்படித்தா.

காடன்:—"நீ சொல்ரதெல்லா சரிதா. மெய்யே! என்னமோ என்மனசுக்குத் தோணியதே நான் சொன்னே. கொஞ்சம் பயம் தோணத்தா செய்யிது. ரொம்ப நேரமாபேயிடுத் தென்னு சொன்னே. வேறொண்ணு மில்லே! நீ கோவிச்சுக்காதே. நானும் இனிமே உன்னைப் போல பொறுமையாயிருக்கேன்." என்று சொன்னான்.

உடனே இருவரும் திடமனதுடையவர்களாய், நேராக நிமிர்ந்து உட்கார்ந்து வழிமேல் விழிவைத்து இமைகொட்டாது கவனித்துக் கொண்டிருந்தனர்.

ஸ்டேஷன் மாஸ்டர் சுந்தரனை வஞ்சனையாக அனுப்பிவைத்த பின் தாம் தமது சயனத்திற் சென்று சயனித்தார். தூக்கம் வர இல்லை. கெடியாரத்தை அடிக்கடி எடுத்துப் பார்த்தார், மணி இரண்டும் ஆயிற்று; மூன்றும் ஆயிற்று; காடனும், மாடனும் நாடக்காணோம். சந்தேகம் அவருக்குச் சனித்தது. ஜயம்பெறுவோம் என்னும் எண்ணம் போய் பயம் அதிகரித்தது. ஆசாமிகள் இருவரும் தம்மை மோசம் செய்து விட்டனரோ என்றும் எண்ணினர். சென்றவன் சரியாகப் போய் சேர்ந்தானோ? அல்லது சோராதொழிந்தானோ என்று ஐயுற்றார். வரவர அவருக்குக் கலவரம் அதிகமாயிற்று 'டிங், டாங், என்று மணி நாலரையாயிற்று. அதற்குமேல் அவரால் பொறுக்க முடியவில்லை. எதற்கும் போய் நேரில் பார்த்துவிட்டு வந்து விடுவதென்று தீர்மானித்தார். அந்த க்ஷணமே மேலாடையுமின்றி ஊத்துக்குளியை நோக்கிவந்தார்.

அவர் சற்றுதூரத்தில் ஸ்டேஷன், மாஸ்டர் அவசரமாக வந்துகொண்டிருப்பதைச் சுந்தரன் கண்ணுற்றான். அவனுக்குமிகுந்த மனக்கிலேசம் உண்டாயிற்று. எங்கேதன்னைக் கண்டு பிடித்து விடுவார்களோ வென்று எண்ணி நெஞ்சம் புண்ணுறனன். (வரும்)

Presence of mind IV.

சமயோசிதமான யுக்தி 4.

ஒரு குழந்தை இரண்டு சலங்கைகளை வைத்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருந்தது; அவைகளில் ஒன்றை விழுங்கிவிட்டு அது கத்தியது. அதன் பக்கத்தி லிருந்த அக்குழந்தையின் தகப்பனார் திடுக்கிட்டு வெகு பரபரப்புடன் குழந்தையை எடுத்துக்கொண்டு டாக்ட ரிடம் ஓடினார். டாக்டர் சலங்கை வெளியே வருவதற்குக் குழந்தைக்குப் பேதிக்குக் கொடுத்து அவரை அனுப்பி விட்டார்.

தகப்பனார் ரசாயன சாஸ்திரத்தில் தேர்ந்த பீ. ஏ. டாக்டர் பேதிக்குக் கொடுத்தும் குழந்தையின் கதி யாதாகுமோ வென்கிற திகில் அவர் மனத்தைவிட்டு அகலவில்லை. மனப் பீதியுடன் வீட்டுக்குவந்தார். அவர் வீட்டையடைந்ததும் அவ்வவ்விடங்களில் நடக்கும் புதுமை காணப் போயிருந்த *நான் "ஏனையா சாஸ்திரி யாரே, எங்கே அவ்வளவு வேகமாகச் சென்றீர்?" என்று கேட்டேன். சாஸ்திரியார். பதைபதைத்த மனதுடன் "குழந்தை சலங்கையை விழுங்கி விட்டது. டாக்டரிடம் சென்றிருந்தேன். இதோ பாருங்கள். குழந்தையின் வயிற்றிலிருக்கும் சலங்கை ஆடுகிற சப்தம் கேட்கிறது" என்று குழந்தையைக் கையில் பிடித்துக்கொண்டு ஆட் டிக்காட்டினார்.

---

* பாலவிநோதினி

இதைப் பார்த்தநான் குழந்தை வயிற்றிலிருக்கும் சலங்கை ஆடவாவது வெளியில் சத்தம் கேட்கவாவது என்று ஆச்சரியப்பட்டு மறுமுறை குழந்தையை ஆட்டு ம்படி சொல்லி உற்றுக்கேட்டேன். சப்தம் பலமாகக்கேட் டது. ஆச்சரியம் மேலிட்டவளாய்க் குழந்தையையும் தகப்பனுரையும் உற்று நோக்கினேன். சாஸ்திரியார் ஒரு கையை மூடிக்கொண்டிருந்தார். ஒருசமயம் சல ங்கை இவர் கையிலிருந்தாலும் இருக்கலாம் என்று நினை த்துக் கையைத் திறக்கும்படி சொன்னேன். திறந்தவுடன் சலங்கை சொட்டென்று கீழேவிழுந்தது. நானும் மற்று முள்ளவர்களும் கொல்லென்று சிரித்தோம்.

சாஸ்திரியார் தன் கையிலிருந்த சலங்கை ஆடிய தால் கலவரப்பட்டுத் தாம் ரசாயன சாஸ்திரத்தில் தேர் ச்சியடைந்தவரா யிருந்தும் வயிற்றில் சலங்கை இருந்தா லும் அது ஆடும் சப்தம் வெளியே எப்படிக் கேட்கும் என்பது மனதிற் படாமல் வயிற்றுச் சலங்கை ஆடு கின்றது என்று அவர் திகில் அடைந்தார். இது சமயோ சிதமாகப் புத்தியை நிதானப்படுத்திக் கொள்ளாததின் விபரீதம். எந்த ஆபத்திலும் நிதானம் வேண்டுமென் பதை உணர்வீர்களாக!

பாலவிநோதினி

குறிப்பு. சமயோசிதமான யுக்தி என்ற தலைப்பின் கீழ் மூன்று விஷயங்கள் சென்ற வருஷத்துப் பால விநோதினியில் வெளிவந்துள்ளன.

திருக்குறள்

4-ம் அதிகாரம்—அறன்வலியுறுத்தல்.

மூலமும் கருத்துரையும்.

(1) சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூ உங்
காக்க மெவனோ வுயிர்க்கு.

(1). மக்களுக்குத் தருமத்தைவிட மேலானது ஒன்றுமில்லை.

(2) அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.

(2). தருமத்தைவிட மேலான செல்வமுமில்லை. அதை யறப்பதைவிட மேலான கேடுமில்லை.

(3) ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்.

(3). மனம் வாக்கு, காயம் என்னும் இம் மூன்றாலும் தருமம் செய்யக்கடவர்கள்.

(4) மனத்துக்கண் மாசிலனாத லனைத்தற
னாகுல நீர பிற.

(4). தருமஞ் செய்பவன் வஞ்சகமில்லாத மனமுடையவனாய் அதாவது பரிசுத்த மனமுடையவனா யிருக்கவேண்டும். அதுவே தருமமாம்.

(5) அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொ னான்கு
மிழுக்கா வியன்ற தறம்.

(5). பொறாமை, ஆசை, கோபம், கடுஞ்சொல் ஆகிய இந்நான்கையும் விட்டு நடப்பதே தருமமாம்.

(6) அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை.

(6). இறக்கும்போது தருமஞ் செய்வோம் என்று எண்ணாமல் உயிரோடிருக்கும்போதே தருமஞ் செய்க. அந்தத் தருமம் இறக்கும்போது உங்களுக்கு உதவியாகும்.

(7) அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை.

(7). தருமத்தின் பயனைப் பல்லக்குச் சுமப்பவனிடமும் பல்லக்கில் ஏறுபவனிடமும் காணலாம்.

(8) வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்.

(8). எவனொருவன் தருமத்தைச் செய்கிறானோ அவனை அந்தத் தருமம் பிறவி யென்னுந் துன்பத்திலிருந்து நீக்கும்.

(9) அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழுமில.

(9). இல்லறத்திலடையு மின்பமே இன்பம். அப்படி யில்லாமல் மற்றைய வழியில் வரும் இன்பமெல்லாம் இன்பம்போல் தோன்றினும் துன்பத்திலே சேர்ந்தனவாம்.

(10) செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி.

(10). செய்யத் தக்கது நல்ல செய்கை; செய்யத் தகாதது தீய செய்கை.

Tara Printing Works, Madras.

184333

5-வது ஆண்டு! 1923 வரு!!

பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்

வருடசந்தா தபாற்கூலி யுட்பட	இந்தியா, பர்மா, சிலோன் ...	ரு. 1 8 0
	பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு	ரு. 2 0 0
தனிச் சஞ்சிகை	விலை	ரு. 0 2 6

1. பத்திரிகைக்கு ஜனவரி மீ முதல் டிசம்பர் மீ வரையில் ஒரு வருஷக் கணக்கு. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி மாதம் முதற்கொண்டே சஞ்சிகைகள் அனுப்பப்படும். பாதி வருஷத்திலிருந்து சேர்த்துக் கொள்ளப் படமாட்டாது. ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

2. சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் முழு விலாசத்தையும் தெளிவாய் எழுதி யனுப்பவேண்டும்.

3. சந்தாத் தொகையை முன்னுடிசெலுத்தியாவது அல்லது வி.பி.யில் கட்டியாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளலாம்.

4. வி.பி. யில் பெற்றுக் கொள்வதால் அணா மூன்று அதிகமாய்ச்செலவாகிறபடியால்சந்தாத்தொகையை மணியார்டர் செய்வதே நலம். இது முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது.

5. யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் ஒரு மாதத்திற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும்.

6. இடம் மாறும் சந்தாதாரர்கள அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் பழைய விலாசத்திற்குவந்து சேருமுன் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை அறிவிக்கவேண்டும்.

7. சந்தா நெம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு ...	ரூபா.	5—0—0
அரைப் பக்கத்திற்கு " ...	"	3—0—0

விலாஸம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
இராயப்பேட்டை போஸ்டு, சென்னை.

0749/81

Children, Ladies & Gentlemen!

For moral & Relegious instructions

For Good mannres, Duty, Conduct, Character &c.,

Read Balavinodini IV Volume:—all the 12 issues, with most *beautiful halftone illustrations*, bound together in Gold Gilt calico
Price Rs. 2 0 0

Only limitted copies available.

Balavinodini III. Volume (1921) Do Do in reprint; will be ready shortly.

ஒவ்வொருவருடைய முன்னேற்றத்திற்கும் ஆதாரமாயிருக்கிற, நல்லொழுக்கம், நீதிபோதம், மாதுருபக்தி, பிதுரு பக்தி, பதிபக்தி, தெய்வபக்தி, தேசபக்தி, முதலியவைகளைக் கொடுக்கும் நிதி. எது?

சுவல்ப காபிகளே இருக்கின்றன.

பாலவிநோதினி 4-வது வால்யம் 12 சஞ்சிகைகளும் அநேக அழகிய ஆப்டோன் படங்களுடன் பளபளப்பான தங்ககில்ட் கலிகோ பைண்டு செய்தது.

விலை ரூ. 2 0 0

பாலவிநோதினி 3-வது வால்யம் (1921 ஹ்ம்) ஷை ஷை ஷை அச்சில்: சீக்கிரம் வெளிவரும்.

விலாசம்:—

மானேஜர்,
பாலவிநோதினி ஆபீசு,
இராயப்பேட்டை P. O.
சென்னை.

குறிப்பு:—எல்லாவிதத் தமிழ் நாவல்களும் கிடைக்கும்.